# IN THE COURT OF I ADDITIONAL DISTRICT JUDGE, CUDDALORE.
## O.S.No. 147 Of 2014

| | | |
|---|---|---|
| **Witness Rank** | : | DW2 |
| **Name of the Witness** | : | செந்தில்குமார் |
| **Father's Name** | : | பாவாடை பிள்ளை |
| **Age** | : | 60 |
| **Occupation** | : | |
| **Address** | : | எண்.11, ருக்மணி நகர், பாதிரிக்குப்பம், கடலூர் 607 002. |

Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 14th day of October, 2025.

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை :-

நான் பத்திரங்கள் எழுதுவதற்கு எனக்கு உரிமம் உள்ளது. சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை. சண்முகம் எனக்கு தெரியும். குமார் யார் என்று எனக்கு தெரியாது. வாதி லோகநாதனை எனக்கு தெரியாது. சண்முகம் வாதியின் மகன் பாலாஜிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்ற விவரம் சண்முகம் சொல்லி எனக்கு தெரியும். கிரையத்தொகையில் பாக்கி இருந்தால் கிரையப்பத்திரம் தயாரிப்பவரே (எழுத்துக்காரர்) அந்த பாக்கித் தொகைக்கான ரசீது ( உறுதிமொழி பத்திரம்) எழுதுவார் என்றால் சரிதான். நான் மஞ்சக்குப்பத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் வாரண்டாவில் உட்கார்ந்து தயாரித்தது தான் பிவாதசஆ 2 ரசீது ( உறுதிமொழி பத்திரம் ) ஆகும். கிரையப்பத்திரம் குள்ளஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தின் எல்லைக்குட்பட்டது என்று சொன்னால் சரிதான். சிறு வயதில்

இருந்தே எனக்கு சண்முகத்தை நாங்கள் ஒரே ஊர்க்காரர் என்ற முறையில் எனக்கு பழக்கம். பிவாதசஆ 2 ரசீது ( உறுதிமொழி பத்திரம் ) சண்முகம் சொல்லி நான் எழுதியது என்று சொன்னால் சரிதான். வாதி லோகநாதன் சொல்லி நான் எழுதவில்லை என்றால் சரிதான். அவரை நான் பார்த்தது கிடையாது. சண்முகம் கேட்டுக்கொண்டதால் பொய்யான ஆவணத்தை அவருக்கு நான் தயார் செய்துக்கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பிவாதசஆ 2 ரசீதில் ( உறுதிமொழி பத்திரம் ) உள்ள கையொப்பம் என்னுடையது அதற்கு கீழே எனது யெர் அல்லது எழுத்தர் என்கிற முத்திரை இல்லை என்றால் சரிதான். வாதசாஆ 1 கிரைய ஒப்பந்தம் நான் தான் எழுதினேன் என்றால் சரிதான். வாதி பெயருக்கு சண்முகம் எழுதிக்கொடுத்த ஒப்பந்தம் வாதசஆ 1 கிரைய ஒப்பந்தம் என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் சண்முகம் கையொப்பமா என்று எனக்கு தெரியவில்லை. நான் வெறும் ஆவணம் மட்டும் தான் எழுதிக்கொடுத்தேன். சண்முகம் சொல்லித்தான் வாசதஆ 1 கிரைய ஒப்பந்தம் நான் எழுதினேன் என்று சொன்னால் சரிதான். வாதி எனக்கு இந்த ஆவணம் எழுதிக்கொடுக்க சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him / her to be Correct.*
*Tmt.G.Saraswathi*
*I Additional District Judge*
*Cuddalore*